**நாள்**: 12.11.2025

O.S. No. 33/2021

**வா.சா.1**

**பெயர்: துரைராஜ் , த/பெ. ராமசாமி நாயுடு**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:**

என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.அ. 1 ஆவணத்தில் நான் கிரயம் பெற்ற சொத்தின் அளவீடுகள் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். மொத்த விஸ்தீரணம் சொல்லப்பட்டுள்ளது. சாலைக்காக எவ்வளவு இடம் நான் கிரயம் பெற்ற சொத்திலிருந்து எடுக்கபட்டுள்ளது என்ற விபரத்தை என் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா புலஎண்ணில் சாலைக்காக எவ்வளவு இடம் பஞ்சாயத்தால் எடுக்கப்பட்டது என்ற விபரத்தையும் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் மொத்தமாக எவ்வளவு எடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி பொது சாலைக்காக நில எடுப்பு செய்த பஞ்சாயத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் இவ்வழக்கு நிலைநிற்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி நில எடுப்புகாக பஞ்சாய்த்தில் எனக்கு சார்பு செய்யப்பட்ட அறிவிப்பு எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றபோது தாவா சொத்து உட்பிரிவு செய்யப்பட்டு என் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. UDR திட்டத்தின் கீழ் பிறகு தான் பட்டா கொடுத்தார்கள். மேற்படி UDR திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட பட்டாவையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் வருவாய் பதிவுகளில் மட்டும்தான் இருந்து வந்தது அதற்காக தனியாக ஆவணங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. UDR திட்டம் என்பது 1986 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். UDR திட்டத்தின் கீழ் யார்யார் நிலத்தை அனுபவம் செய்து வருகிறார்களோ அவர்களுக்காக பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற சொத்தை அளவீடு செய்து பட்டா பெறவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு பணியிலிருந்து வெவ்வேறு ஊருகளுக்கு மாறுதலாகியிருந்த நிலையில் 2017 ல் தான் ஆக்கிரமிப்பு குறித்து தெரிந்தது. அதன் பிறகு சர்வேயர் அழைத்து நான் அளவீடு செய்தேன். மேற்படி 2017 ல் எனக்கு ஆக்கிரமிப்பு குறித்து தெரிந்தும் அதிலிருந்து

மூன்று ஆண்டுகளுக்குள் நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த வழக்கு காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. மேற்படி இந்த பிரதிவாதி நான் கிரயம் பெற்ற சொத்தை ஆக்கிரமித்துள்ளது தொடர்பாக இந்த வழக்கிற்கு முன்னால் ஏற்பட்ட நில அளவையர் அறிக்கை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2017 ல் அளவீடு செய்யவில்லை என்பதாலேயே மேற்படி அறிக்கை எதுவும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

என் வழக்குரையில் தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தான் எனக்கு தெரியவந்துள்ளதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பிறகு நான் நில அளவையர் மூலம் அளவீடு செய்ததாக வழக்குரையில் கூறியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.11.12 18:04:53 +0530